★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 5[illegible]

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: வைகாசி 12உ வெள்ளி (25—5—56) ★ ★ வெளியூர்: வைகாசி 13உ சனி (26—5—56) [இதழ் 294

புத்தர் ஒரு புரட்சிக்காரர்!

"சாதிமுறை, தீண்டாமை, உயிர்ப்பலி இவற்றிற்கு எதிராகப் புரட்சி செய்தவர் புத்தர்! ஆனல், இன்னும் நாம், சாதி உணர்வு கொண்டவர்களாக — தீண்டாமை எண்ணம் கொண்டவர்களாக இருக்கிறேம். இன்னும் ஆண்டவன் பெயரால் உயிர்ப்பலி செய்யப்படுவதையும் நாம் காண்கி றேம்",

என்று டாக்டர் ராதாகிருஷ்ணன், டெல்லியில் நடைபெற்ற புத்த ஜெயந்தி விழாவில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிருர்.

புத்தருடைய பணி, 25 நூற்ருண்டுகளுக்குப் பிறகும் முடிய வில்லை!

தெய்வமல்ல! தேவனல்ல! தேவதையுமல்ல!

புத்தர் ஒரு புரட்சிக்காரர்; பகுத்தறிவாளர்

ஆசியாவிற்கு ஜோதியும் உலகிற்கு அறவொளியும் தந்த ஒளிப்பிழம்பு

சாதிகள் ஒழிய—மூடச் சடங்குகள் அகல பாடுபட்ட உத்தமராவார் புத்தர்

நகர புத்தர் விழாக் கூட்டத்தில் அண்ணு கருத்துரை

புத்தர் நெறி மக்களுக்குப் பகுத்தறிவூட்டும் நெறி—சாதி வேறு பாடுகளை, மத மூடநம்பிக்கைகளை ஒழிக்க எழுந்த புரட்சி நெறி—பகுத்தறிவு நெறியாகும் என்ற கருத்தை, அண்ணு அவர்கள், சென்னையில் தெரிவித்திருக்கிருர்.

"2,500 ஆண்டுகளுக்கு, முன்பு, ஆசியாவிற்கு ஜோதியும், உலகிற்கு அறிவொளியும் பரப்பிய புத்தரின் பிறந்த நாள் விழாவிலே கலந்து கொள்ள வாய்ப்பு கிடைத்தமைக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

"இங்கு, இந்த விழாவில், பல மதங்களில் நம்பிக்கை கொண்டவர்களும், என்னைப் போல் எந்த மதத்திலும் நம்பிக்கை வைக்காதவர்களும் கலந்து கொள்வதிலிருந்து, உத்தமர் புத்தர் வழங்கிய கொள்கைகளின் உயர்வை உணர்ந்துகொள்ள முடியும்.

"புத்தர் நம்முடைய நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் உள்ள அறிவாளிகளால் பாராட்டப்படுபவராவார்.

"2,500 ஆண்டுகளுக்குப் பின்னும், புத்தரின் கொள்கைகளின் அருமை பெருமைகள் புகழப்படுகின்றன —பாராட்டப்படுகின்றன. புத்தர் வழங்கிய உத்தமமான கருத்துக்கள் அரிய நெறி, நாட்டவருக்கு மிகப் பயன் தரக்கூடியனவாகும்.

"புத்தரின் வாழ்க்கை வரலாற்றினை நோக்குபவர்கள் உள்ளம் உருகாமல் இருக்க முடியாது.

"2,500 ஆண்டுகளுக்குமுன் ஒரு அரசனின் மகனுகப் பிறந்தார் புத்தர்; அழகான அரண்மனை இருந்தது; அன்பான தந்தையிருந்தார்; அருமை மனைவி, சப்ரமஞ்சத்தில் காத்திருந்தார்; அழகான குழந்தை இருந்தது; சுகபோகமான வாழ்க்கைக்கான வாய்ப்புகள் அத்தனையும் இருந்தன; என்ருலும், புத்தருக்கு உள்ளத்தில் ஏதோ ஒருவகையான அதிருப்தி! ஏதோ ஒருவகையான குறை இருந்து கொண்டிருந்தது!

"பெரிய அரண்மனை-அங்கே உள்ள சுகமான வாழ்வு-ஏவல் புரிய சேவகர்கள்-எது வேண்டுமானலும் பெற்றுத்தரும் தந்தை—அன்பு மனைவி-ஆசைக் குழந்தை- அத்தனையும் அவருக்கு திருப்தியைத் தரவில்லை! அவர் மனதிற்குச் சாந்தியைத் தர வேறு ஏதோ ஒன்று புத்தருக்குத் தேவைப்பட்டது!

"மனிதர்களுக்கு, மூப்பு ஏன்? மனிதர்களில் சிலர் பிணியாலே பீடிக்கப்பட்டு அவதியுறுகிருர்களே, ஏன்? மனிதர்களில் சிலர் அரண்மனையிலும் சிலர் குடிசைகளிலும் வாழ்கிருர்களே, ஏன்? மனிதர்களில் சிலர் சுகபோகமான வாழ்வு பெற்றவராயும், சிலர், கஷ்ட நஷ்டங்களே மிகுந்த வாழ்வு பெற்றவராயும் விளங்குகிருர்களே, ஏன்?—என்ற கேள்விகளுக்கு விடை தேடி அலைந்தார், புத்தர்!

"அவரது சந்தேகத்திற்கு தெளிவான பதில்களை, நான்கு வேதங்களும், உபநிஷத்துகளும், வேத புராணங்களும தரமுடியாது போய் விடுகின்றன; தனக்குக் கிடைத்த ஆசான்களை எல்லாம் கேட்கிருர், புத்தர்!

"அவர்களோ, 'அரசே! நீங்களோ ஒரு அரசர்! அரண்மனை வாழ்வும், அரசபோகங்களும் பெற்றிருப்பவர்; இன்று சிற்றரசராக இருக்கும் தாங்கள் நாளைப் பேரரசராகலாம்; அதற்கான பெரும்படை வரிசைகள் நம்மிடம் ஏராளமாக உண்டு; ஆற்றல்மிக்க வீரர்கள் அதில் ஆயிரக்கணக்கில திரண்டிருக்கிருர்கள்; ஆயுதங்களும் ஏராளம் உண்டு; பேரரசு ஆன பின்னர் சக்கரவர்த்தி ஆகலாம்; சக்கரவர்த்தி ஆகிவிட்டால் பலர் கப்பம் கட்டுவார்கள்; செல்வத்தையும், புகழையும் குவிக்கலாம். உங்களுக்கு ஏன் இந்தக் கவலைகள்'? — என்று கூறுகின்றனர்!

"புத்தரோ, 'சரி; சக்கரவர்த்தியாகிவிட்டால் மட்டும் எனது சிந்தனையில் உள்ள துக்கத்தை நீக்குவது எப்படி? எனது கேள்விகளுக்கு விடை தெரிய வேண்டாமா? மனிதன் மூப்பிற்கும், நோய்நொடிக்கும், துயரங்களுக்கும் ஆளாவது ஏன்?'—என்று திரும்பவும் கேட்கிருர்.

"ஆசான்களோ, 'அரசே! மக்கள் இந்த உலகத்தில் இப்படிக் கஷ்டப்பட்டாலும், மேல் உலகத்தில் இந்தக் கஷ்டங்களை எல்லாம் அனுபவிக்க வேண்டியிராது; அந்த உலகத்தில் மக்கள் இன்பமான வாழ்வு பெற, இந்த உலகத்தில் கஷ்டப்படுகிருர்கள்,'—என்று கூறுகின்றனர்.

"சித்தார்த்தரோ, 'இந்த உலகத்தில் அரண்மனையும்—குடிசையும், என்ற வேறுபாடுகள் ஒழிய மார்க்கமில்லையா? மக்கள், துன்பமின்றி இந்த உலகில் வாழ வழி இல்லையா?'—என்று கேட்கிருர்.

"சித்தார்த்தருக்கு ஏற்பட்ட இந்தக் குழப்பத்தைக் கண்டு அவரது தந்தையும், இதரரும், கலங்குகிருர்கள்!

"எப்படி ஏற்பட்டது சித்தார்த்தனுக்கு இந்தக் குழப்பம்? பெரிய அரண்மனை; அங்கே அம்சதுளிகா மஞ்சத்தில் காத்திருக்கும் அருமை மனைவி; அருகே அருமையான குழந்தை; தங்கத் தட்டில், கனிகளை ஏந்திவரும் தாதியர்; கூப்பிட்டவுடன் ஓடிவர ஏவலாட்கள்; இத்தனையும் இருந்தும், சித்தார்த்தருக்கு ஏன் இந்த மனக் குழப்பம்?—என்று ஏங்குகிருர்கள்!

"சித்தார்த்தரோ, தனது சந்தேகத்திற்குப் பதில்பெற முடியாது போனபோது, அரண்மனையிலிருந்து வெளியேறினுர்.

"நான்கு வேதமும், உபநிஷத்துகளும், நல்லாசான்களும், மற்றவர்களும் தன் சந்தேகத்திற்குப் பதில்கூற முடியாது போனபோது, தானே விடையறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவலால், அரண்மனை வாழ்வை வெறுத்து வெளியேறினுர்.

வெளியேறியதும், ஊண் உறக்கமின்றி கடும் தவம் புரிந்து பார்த்தார்; தபோவனத்தை நாடி ஜெபதபம் செய்தார்; என்ன செய்தும் விடை காணமுடியாது போய்விட்டது. அவர், அரண்மனையிலிருந்து வெளியேறி, இந்த கடும் தவம்புரியச் சென்றபோது,

(4-ம் பக்கம் பார்க்க)

தேவர்களிலும், தேவதைகளிலும் உயர்ந்த மனிதனே புத்தன்!

'ஜாதி அமைப்புக்கு எதிராகக் கண்டனக் குரல் எழுப்பினர்'

'சூரிய-சந்திர கிரகண காலத்தில் உண்ணுதிருப்பதும் நீராடுவதும் மூளைக் கோளாருகும்'

புத்தர் பற்றி இந்தியப் பிரதமர் நேரு

புத்தர் நெறி மக்களுக்குப் பகுத்தறிவூட்டும் நெறி—சாதி வேறு பாடுகளை, மத மூடநம்பிக்கைகளை ஒழிக்க எழுந்த புரட்சி நெறி—பகுத்தறிவு நெறியாகும் என்ற கருத்தை, பிரதமர் பண்டித நேரு டெல்லியில் தெரிவித்திருக்கிருர்.

புதுடில்லி, மே 25—

"குருட்டுத்தனமான மூடநம்பிக்கைகள், போலியான இறை வணக்கம், மதப்பூசல், சாதியத் தீமை இவற்றின் பிடியிலிருந்து விடுபடுவதற்காகப் புத்தர் போதித்த வாழ்க்கை பற்றிய மெய்ஞானத்தை மக்கள் புரிந்து கொண்டு — கற்றுக் கொண்டு வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டும் என்று அறைகூவி அழைக்கிறேன்.

"கௌதம புத்தர் ஒரு கடவுள் அல்ல! தேவர் அல்ல! ஆனல் ஒரு சாதாரண மனிதர்தான்!

"புத்தர், சாதியத்தின் பலவீனங்கள், தீமைகள், மூடப்பழக்கங்கள், போலி தெய்வ வழிபாடுகள் இவற்றிற்கு எதிராகக் குரல் கொடுத்தார்; இவை இன்னும் கூட நம் மக்களில் பெரும்பான்மையினரைக் கப்பிக் கொண்டிருக்கின்றன; எனவே, புத்தர் போதித்த வாழ்க்கை மெய்ஞ்ஞானத்தை—இதயத்தையும் மனதையும் பற்றிய மெய்ஞ்ஞானத்தைப் புரிந்து கொண்டு—கற்றுக் கொண்டு ஒழுக வேண்டும்.

"நாம், இந்தத் தீமைகளிலிருந்து விடுபடுவதற்காக—கொள்கைகளுக்கு உதட்டளவில் ஆதரவு காட்டிவிட்டு, உள்ளத்தில் மதக் கேடுகளை நிரப்பி வைத்துக் கொண்டிருக்கும் தீமைகளிலிருந்து விடுபடுவதற்காகத்தான் புத்தர், போதனைகள் புரிந்தார்.

"புத்தர் விழாவினை நாம் இப்போது கொண்டாடுவதை, 'புத்தர் திரும்பவும் தாயகம் திரும்புகிருர்' எனச் சொல்லலாம்; ஏனெனில் புத்தர் நம் இதயத்தின் எங்கோ ஒரு மூலையில் இருந்த போதிலும், அவரை நாம் இடைக்காலத்தில் மறந்திருந்தோம்.

"புத்தர் மீண்டும் 'வீடு திரும்பு'வது, இந்திய மக்களைப் பொறுத்து வரவேற்கப்பட வேண்டிய ஒன்ருகும். இந்திய மக்களுக்கு மட்டுமே அப்படி என்பது அல்ல—உலக மக்களுக்கே அப்படித்தான். ஏனெனில், இந்தியாவின் தலைசிறந்த புதல்வனை புத்தர், இந்தியாவிற்கு மட்டுமின்றி உலக நாடுகள் அத்தனைக்கும் சொந்தமானவர்.

"மக்களுடைய உள்ளத்தையும், மனதையும் அடிமை கொண்டுள்ள மத, மூட நம்பிக்கைகள் எல்லாம் அழித்து ஒழிக்கப்பட வேண்டியவையாகும்.

"சூரிய கிரகணம், சந்திர கிரகணம் முதலியவற்றின் போது நதிகளில் குளிப்பது போன்ற மூடப் பழக்கங்களையும் சேர்த்துத்தான் ஒழிக்க வேண்டும் என்கிறேன்.

"ஒரு நாள் பட்டினி கிடப்பதோ, ஆற்றில் குளிப்பதோ நல்லதுதான்; ஆனல், அன்று ஒரு கிரகணம் என்பதற்காக ஆற்றில் குளிப்பதும், பட்டினி கிடப்பதும் முழுக்க முழுக்க தவருனதாகும். இது, மக்கள் மனதில் கொண்டிருக்கிற வெறும் பிரமையாகும். இதன் விளைவாக அவர்கள், மூடத்தனத்திற்கு அடிமையாகிவிடுகிருர்கள்.

"ராகு என்ற பாம்பு, கிரகணம் ஏற்படும் போதெல்லாம், சந்திரனை விழுங்க முயற்சிப்பதாக மக்கள் பிரமை கொண்டு விட்டிருக்கின்றனர்; இந்த விபரீதமான அறிவீனத்தை ஒத்துக் கொள்ள நாம் என்ன அத்தனை பெரிய முட்டாள்களா?

"பூமியின் நிழல் [illegible] தானே, சந்திரன் [illegible]

(4-ம் பக்கம் பார்க்க)

****

வருணுஸ்ரமக் கொடுமையை ஒழிக்கவே புத்தர் பிறந்தார்!

"புத்தரை, கடவுளின் ஒன்பதாவது அவதாரமாகக் கொள்ளுகிருர்கள். அதர்மத்தை அழிக்கவே ஒவ்வொரு அவதாரமும் தோன்றியுள்ளன; ஆனல், எந்த அதர்மத்துக்கு எதிராகப் புத்தர் தோன்றினுர் என்பது விளக்கமாக இல்லை. ஆனல், அவர் காலத்தில் ஜாதி ஏற்பாடு (வருணுஸ்ரமதர்மம்) தனது முழுவேகத்தில் சமுதாயத்தைப் பற்றிக் கொண்டிருந்தது என்பதில் ஐயமில்லை. அந்த ஜாதி ஏற்பாட்டின் கடுமையை எதிர்த்து புத்தர் வன்மையாகப் போராடியுள்ளார்."

—'புத்தர் விழா'வில் சென்னை கவர்னர் பிரகாசா.

****

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 25—5—'56 வெள்ளி

நமது புதிய போர்முறை

வடவர் ஏகாதிபத்தியத்தில் வலுக்கட்டாயமாக இணைக்கப்பட்டிருக்கும் திராவிடத்தை, நம்மரும் தாயகத்தை எவ்வகையிலும் எந்த விலை கொடுத்தேனும் மீட்க வேண்டும் என்பது நமது கழகத்தின் அடிப்படை இலட்சியமாகும். இவ்வடிப்படை இலட்சியத்தை மென்மேலும் பெருந் திரளான மக்கள் உள்ளங்களில் ஆழப் பதிய வைக்கும் கருத்துடன்தான், நமது கழகம் மேற்கொண்ட செயல்கள் அனைத்தும் இதுவரை இருந்து வந்திருக்கின்றன. நமது தாயகம் விடுபடும் வரையில், அப்பெரும் பணிக்கு முழுதும் தேவை இருக்கிறது என்பது சொல்லாமலே விளங்கும்.

பிறரிடம் அடிமைபட்டுக் கிடப்பதால் ஒரு நாடு உறும் கேட்டினையும், நாட்டு மக்கள் அநுபவிக்கும் அல்லலையும், விடுபடுவதால் நாட்டுக்கு விளையும் நன்மதிப்பினையும், அதன் பலனாக நாட்டு மக்கள் பெறக்கூடிய நல்வாழ்வினையும், உரிமை இழந்து கிடக்கும் மக்களுக்கு விளக்கிக் காட்டி, அவர்களுக்கு விடுதலை வேட்கையை ஊட்டுவதும், அதையே பரவலாக்குவதும், ஒவ்வொரு விடுதலை இயக்கத்திற்கும் இயல்பாக இருந்து வரும் நீங்காக் கடமையாகும். அவ்வழியில், நாட்டு விடுதலை கோரும் நமது கழகமும் இதுவரை செவ்வனே பணியாற்றி வந்திருக்கிறது என்பதை எவராலும் மறுத்துவிடவும் முடியாது—மறைத்துவிடவும் இயலாது.

மூல இலட்சியத்தை பெரும்பான்மையான மக்கள் அறியச் செய்துவிடுவதின் மூலமாக மட்டுமே, ஒரு நாட்டிற்கு விடுதலை கிட்டிவிடாது. விடுதலை வேட்கை விரிவடைந்து வருவதைக் கண்ட மாத்திரத்திலேயே, குறிப்பிட்ட மக்களுக்கு சுதந்திரத்தைக் கொடுத்துவிட வேண்டும் என்ற அருங்குணம், இதுவரை ஏகாதிபத்திய வெறிபிடித்த எவருக்கும், தானாக அரும்பி இருக்கிறது என எடுத்துக்காட்டும் நிகழ்ச்சி, உலக வரலாற்றில் இடம் பெற்றிருக்கக் காணோம்.

குறிப்பிட்ட கொள்கையில் நியாயம் இருக்கிறது—நேர்மை நிரம்பி வழிகிறது என்பதற்காக மட்டுமே எவரும் அக்கொள்கையை உடனே தழுவிக் கொள்ள மாறுபட்ட கருத்தினர் முன்வருவதில்லை. பலர், மேலும் பலர் கேட்கிறார்கள் என்ற ஒன்றுக்காக மட்டுமே, ஆதிக்கக்காரர்கள் தமது ஆதிக்கத்தை விட்டுக் கொடுக்கத் தாமாகத் துணிவது கிடையாது.

ஒரு நாட்டின் சுதந்திரம் கேட்ட உடன் பெற்று மகிழக் கூடியதன்று. விடுதலை, பலரால் விரும்பப்படுகிறது என்பதற்காகக் கிடைக்கும் பரிசுப் பொருள் அல்ல.

பலாத்காரத்தை மேற்கொண்டு நாட்டை விடுவிப்பது என்பது நாம் உள்ளத்தாலும் உள்ளாத ஒன்று. நாம் உள்ளாதது என்பதுடன், பலாத்காரப் புரட்சி இருபதாம் நூற்றாண்டில் எடுபடாத ஏமாற்றந் தரும் நடவடிக்கையாகும்.

தடியின் தாக்குதலுக்கும், வெடிகுண்டின் வீச்சுக்கும் வீழ்ந்துவிடக்கூடிய அரசு அமைப்புகள் பத்தொன்பதாம் நூற்றாண்டுக்குப் பின்னர், வெறும் காட்சிப் பொருளாகிவிட்டன; சரித்திரத்தில் மட்டுமே காணவேண்டிய சம்பவங்களாகிவிட்டன.

நாடு விடுபட வேண்டியதின் அவசியத்தைப் பல்லோருக்கும் விளக்கிப் பிரச்சாரம் செய்வது விரும்பக்கூடியதுதான். ஆனால் அந்த ஒன்றினால் மட்டுமே இலட்சியத்தைப் பெற்றுவிட எண்ணுவது ஏமாற்றத்திலேயே முடிந்துவிடும்.

வாழ்நாள் முழுதும் பிரசாரம் செய்வதையே ஒரு பொழுதுபோக்காகக் கொண்டிருப்பவர்கள், நாட்டு விடுதலைக் கிளர்ச்சிக்குத் தகுதியற்றவர்கள் ஆவர். பிரசாரத்தின் மூலம் மக்களை ஒன்று திரட்டுவதும், அவர்கள் திரண்டிருப்பதைக் கண்டு உள்ளம் பூரிப்படைவதும், அத்துடன் வெளிப்படையாகக் கூறிவந்த குறிக்கோளை அடையும் பாதையைக் காட்டிவிட்டதாகத் திருப்தி கொள்வதும், முதல்தரமான அரசியல் சூதாட்டமாகும்.

அவர்கள் செயல் சூதாட்டமோ மோசடியோ எதுவானாலும், அவர்கள் குழப்பத்தால், அவர்கள் சொல்வழி விடுதலை ஆர்வம் கொண்டு கொதித்தெழுந்த மக்கள், திகைக்கின்றனா—தெளிவு ஏற்படாது மனம் உடைகின்றனர்.

மனம் உடைந்துபோன நிலையில், விடுதலை என்றப் பேச்சையே வேம்பெனக் கொள்ளுகின்றனர். விடுதலைத் தூதுவர்களை வீணர்கள்-வாழ்க்கையில் வேறு போக்கிடமற்றவர்கள்-எனக் கேலியும் கிண்டலும், வெளிப்படையாகச் சிலரும, மனதுக்குள்ளாகப் பலரும பேசக் கிளம்பி விடுகின்றனர். ஏமாற்றத்திற்காளானோர், தங்களை அக்கதிக்குத் தள்ளினவர்களை, அதுவும கூறுவர்-அதற்கு மேலும தூற்றுவர். அது, மனித இயல்பு.

ஏமாற்றப்பட்டோம் என்ற எண்ணத்திற்கும், ஏமாற்றிவிட்டனர் என்ற அபவாதத்திற்கும் எவரும் ஆளாகிவிடாத நிலையில், திருச்சி, தாய்நாட்டு விடுதலைக்கான ஒரு புதிய போர் முறையைச் சுட்டிக்காட்டி இருக்கிறது. எந்த ஒரு நாட்டு விடுதலை கோரும் அரசியல் கட்சியும், தனது வளர்ச்சியின் குறிப்பிட்ட கட்டத்தில் கட்டாயமாக மேற்கொள்ள வேண்டிய பொதுத் தேர்தல்களில் பங்குகொள்ளும் போர் முறையாகும்.

நமது கழகத்தின் நண்பர்—வழிகாட்டி — பேராசிரியர் என்ற நிலையில் இருந்துவரும் அண்ணா, இப்புதிய போர் முறை குறித்து மாநாட்டினருக்கு விளக்கம் ஏதும் தரவில்லை. பொதுச்செயலாளரும் கூட, போர் முறைக்குச் சாதகமாக சிறுமூச்சும் விடவில்லை.

இப்புதிய போர் முறையை மாநாட்டில் கூடி இருந்த பல்லாயிரக்கணக்கானவர், கழகத்தை நடத்திச் செல்லும் பொறுப்பாளர்களுக்கு அறிமுகப்படுத்திவைத்தனர். அறிமுகமா—இல்லை—இல்லை; 'இப்புதிய போர் முறையை ஏற்றுக் கொண்டு பணி புரிக' என ஆணைப் பிறப்பித்தனர்.

மக்கள் ஆணை வழி இயங்க நம் கழகம் கடமைப்பட்டிருக்கிறது. தனி ஒருவர் மூளைப் பல்ல இப்புதிய போக்கு. மக்கள் காட்டிய வழி, இது.

இப்புதிய போக்குக்கண்டு, சிலர் நம்மை பதவிப் பித்தர் எனப் பேச—இல்லை—ஏசக் கிளம்புவர்! தாறுமாறாகத் தூற்றுவர்—பழிப்பர்—பொல்லாங்கு கூறுவர்!

இப்பொழுதே இரண்டொருவர், என்றென்றும் செய்து வரும் தமது இலட்சியப் பணியான நம்மைத் தூற்றுவதைத் தீவிரமாகத் தொடங்கியுள்ளனர்! மேலும் காரமாகும் இரண்டொரு நாட்களில்!

எப்பொழுதும் போல் இப்பொழுதும், நாம், அந்த ஏமாற்றம் அடைந்துள்ளோரின் ஏசல் பேச்சை செவிமடுக்கப் போவதில்லை. அவர்கள் பொது வாழ்வே அதுவாக இருக்கும் பொழுது, நாம், அதுபற்றி கவலை கொள்வது பொருத்தமாகுமா?

இதுவரை, நாம் செய்யாத குற்றத்திற்காக, அவர்கள் நம்மை ஏசிவந்தனர்—மகிழ்ந்தனர்! இனியோ, அவர்கள், மக்களையே ஏசப்போகின்றனர்!

புதிய போர் முறையை நம்மிடம் தந்து, 'அதன் வழி நட' எனக் கட்டளை இட்டிருப்பவர்கள் மக்கள். அவர்களுக்கு ஏச்சு கிடைக்க இருக்கிறது இனிமேல். ஏச்சை ஏற்கும் மக்கள் இருக்கிறார்கள்—ஏசும் குணம் படைத்த நல்லவர்கள் இருக்கிறார்கள். ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு நடந்து கொள்ளவேண்டிய நிலை இருக்கும்பொழுது, நாம் எதற்கு, ஏசல்கண்டு எரிச்சல் அடையப்போகிறோம்?

என்றும் இருந்து வருவதைக் காட்டிலும் பன்மடங்கு, அந்த இரண்டொருவர் வசைமாரி பற்றிக் கவலையற்று இருக்க வேண்டும். அவ்வசைமாரியை நம்முடன் சேர்த்துத் தாங்கிக் கொள்ள மக்கள் உள்ளனர். நமக்கு ஆணையிடும் ஆற்றல் பெற்றுள்ள வீரமக்கள் உள்ளனர். எனவே, வழக்கமான வசை கண்டும் நாம் இனி வழக்கமான அமைதியை கடைபிடித்து ஒழுகலாம்.

கைதிகள் கேவலமாக நடத்தப்படுகின்றனராம்!

இந்தியாவிலேயே தங்கிவிட பாக். கம்யூனிஸ்டு முடிவு

ஐதராபாத், மே 23—

எட்டு மாதங்களுக்குமுன் இந்தியாவந்த பாக். கம்யூனிஸ்டுக்கட்சியின் முன்னாள் காரியதரிசி ஜகீர், அரசியல் காரணங்களை முன்னிட்டும், சொந்தக் காரணங்களை முன்னிட்டும் பாகிஸ்தானுக்கு இனி செல்வதில்லையென முடிவு செய்துவிட்டாராம்!

பாகிஸ்தான் சிறைகளில், கைதிகள் மிகக் கேவலமாக நடத்தப்படுவதாக அவர் அறிவித்துள்ளார்.

சென்னை, மே 24—

இஞ்சிக்கும், பச்சை மிளகாய்க்கும் விற்பனை வரியிலிருந்து விதிவிலக்கு அளித்திருப்பதாக சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

'வள்ளுவர் நகர்' அமைப்புப் பற்றி 'தமிழ்நாடு' இதழ் தரும் படப்பிடிப்பு!

★

தி. மு. கழக 2-வது மாநில மாநாட்டின் சிறப்பை நாம் எடுத்துரைப்பதைவிட, இதரர் எடுத்துரைப்பது சாலச் சிறந்தது அல்லவா? மாநாட்டிற்காக நாம் பட்ட கஷ்ட-நஷ்டங்கள், மேற்கொண்ட பெருமுயற்சிகள், எப்படியெல்லாம் பாராட்டத் தக்க உருவம் பெற்றிருந்தன என்பதற்கு, மாநாட்டின் ஏற்பாடுகளைப்பற்றி—நாம் சிருஷ்டித்த சிங்கார நகராம் வள்ளுவர் நகரைப்பற்றி 'தமிழ்நாடு' இதழ் தரும் படப்பிடிப்பைப் படித்துத் தெரிந்துகொள்ளுங்கள் :—

"அழகுக்கு அழகு செய்தது போல் மாநாட்டுப் பந்தலே ஒரு கண்காட்சியாக அமைந்திருந்தது.

"திரைப்பட நடிகர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் மேற்பார்வையில் தயாரிக்கப்பட்டுள்ள அலங்கார முன் வாயில் அரண்மனைக் கோட்டை வாயிலைப்போல் பீடுடன் அமைக்கப்பட்டிருந்தது.

"உள்ளேசென்றதும், வானுற ஓங்கி வளர்ந்த கம்பத்தில் தி. மு. கழகத்தின் இரு வண்ணக்கொடி பட்டொளி வீசிப் பறந்தது. அதன் இரு மருங்கிலும் சிங்கங்கள் கம்பீரமாக நின்றன.

"அவற்றிற்கு சற்று தூரத்தில் புத்தர் சிலையும், வள்ளுவர் படமும் வனப்புடன் வைக்கப்பட்டிருந்தன.

மாநாட்டுப் பந்தல்

"எல்லாவற்றையும்விட ஈடு இணை இல்லாதிருப்பது பந்தலின் முகப்புத்தான்; 'எப்படித்தான் அப்படி தென்னங் கீற்றுகளால் அலங்கார முகப்பு அமைத்தார்களோ,' என்று எண்ணும்படியாக அவ்வளவு வேலைப்பாடு நிறைந்ததாக இருந்தது.

"சென்னை மாநிலத்திலேயே இதுவரை எங்குமே போடப்படாத மிகப் பெரும் அளவில் மாநாட்டுப் பந்தல் போடப்பட்டு இருந்தது. அத்தனையும் மூங்கிலும், மூங்கில் தென்னந் தட்டிகளும் தான். மாநாட்டுக்கு மூன்று இலட்சம் மக்கள் வருவார்கள் என்று மதிப்பிட்டு, அவர்கள் அனைவரும் இரவில் மாநாட்டுப் பந்தலிலேயே வசதியாகத் துயில வேண்டுமென்ற எண்ணத்துடன் பந்தல் அமைக்கப்பட்டிருந்ததென்றால், அதன் பரப்பளவை நீங்களே கணக்கிட்டுப் பார்த்துக்கொள்ளுங்கள்.

"நாடகங்கள் நடத்துவதற்கென திறந்தவெளி அரங்கமொன்றும மாநாட்டுப் பந்தலுக்குப் பின்புறம அமைக்கப்பட்டிருந்தது.

"மாநாடு நடைபெற்ற இடம், முன்னர் தலைமை அமைச்சர் நேரு திருச்சிக்கு வந்தபொழுது அவர் பேச முதலில் ஏற்பாடு செய்யப்பட்டு, பின்னர் தண்ணீர் கிடைக்காது என்று கைவிடப்பட்ட இடமாகும். அப்படிப்பட்ட இடத்தில் சிறிதுகூடத் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படாதவகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன."

பிரிட்டிஷ் இராணி ரஷ்யா செல்வார்?

பிரிட்டிஷ் மந்திரி சபையின் சம்மதத்தைப் பெற்று, இராணி எலிசபெத், ரஷ்யாவுக்குச் செல்லக்கூடும் எனக் கருதப்படுகிறதாம்!

வசதிமிக்க இடங்களை விட்டுவிட முடியாதாம்

பிரிட்டிஷ் அயல் நாட்டு மந்திரி கொக்கரிப்பு

லண்டன், மே 23—

"எப்பாடுபட்டேனும், வலிமை தரும் சில இடங்களைப் பிரிட்டன் வைத்துக்கொண்டே தீரும்; அவைகளில் சிங்கப்பூர், ஏடன், சைப்ரஸ் முக்கியமானவைகளாகும்,"

என்று, பிரிட்டிஷ் அயல் நாட்டு மந்திரி, கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டுவிட்டு, அவர் மேலும் சொன்னார் :—

"நமது இராணுவ நலன்களுக்கு மிகவும் அவசியமான கடல் கடந்த உடைமைகளை விட்டுக்கொடுப்போமாயின், நமது எதிர்காலச் சந்ததிகளுக்கு நாம் நம்பிக்கைத் துரோகம் செய்தவர்களாவோம்.

"நமது பொருளாதாரத்தைக் காப்பாற்றிக்கொள்ள கடல் கடந்த வர்த்தகத்தையும், நல உரிமைகளையும் சார்ந்தே நமது தீவு இருக்கிறது; உதாரணமாக, மத்தியக் கிழக்கிலிருந்தே நாம் எண்ணெய் பெற வேண்டியிருக்கிறது.

"சங்கிலித் தொடர்புபோல், வெகு தூரத்துக்கு போக்குவரத்துத் தொடர்பை வைத்துக்கொண்டிருக்கிறோம்; ஆகவே, சில பலமிக்க இடங்களை என்ன நேரிட்டாலும் நம்மிடமே வைத்துக்கொள்வது அவசியமாக இருக்கிறது."

ஆலை முதலாளிகள் வேலை நிறுத்தம்?

டாக்கா, மே 24—

"தக்க அளவுக்கு மூலப் பொருட்கள், இயந்திரங்கள்—அவற்றின் உறுப்புகள் இறக்குமதிக்கு 'லைசென்சு'கள் வழங்கப்படாவிட்டால், நாங்கள் பொதுவேலை நிறுத்தம் செய்வதைத் தவிர வேறு இல்லை," என்று, டாக்கா வர்த்தக சபைத் தலைவரும், ஐக்கிய வர்த்தக சபைத் தலைவரும் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளனராம்.

பம்பாயில் உருவாகும் அணு ஆராய்ச்சிக்கூடம்

மக்கள் சபையில் நேரு விளக்கம்

புதுடில்லி, மே 23—

'இந்நாட்டில் உருவாக்கப்படும் அணு ஆராய்ச்சிக்கூடம் ஆசியாவில் வேறு எந்நாட்டிலும் உள்ளதைவிட மிக்க முற்போக்கானதாகும்' என்றும், 'ஆசிய நாடுகளிலிருந்து வருபவர்கள் இக்கழகங்களில் பயிற்சி பெறுவதற்கு வசதிகள் செய்ய இந்தியா முன்வந்திருக்கிறது' என்றும் பிரதமர் நேரு, மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

எவ்வளவு தெரியுமா?

குறைந்த வருமானமுள்ளவர்களுக்கு வீடு கட்டித்தரும் திட்டத்தின்கீழ், குறிப்பிட்ட மாதத்தில், சென்னைக்கு ரூ. 10-இலட்சமும், ஆந்திராவுக்கு ரூ. 10 இலட்சமும் மைசூருக்கு ரூ. 18 இலட்சமும் கடன் தொகைகளாக் வழங்கப்பட்டுள்ளதாம்!

இத்திட்டத்திற்கென மொத்தம் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 2153·2 இலட்சம்; இதுவரையில் மொத்தம் வழங்கப்பட்ட கடன் தொகை ரூ 1105 61 இலட்சமாகும்.

‘தாய் மொழி ஆட்சி மொழியாக வேண்டும்’

‘தமிழ்மொழி வழங்கும் பகுதிகள் தனி மாநிலமாக உருவாக வேண்டும்’

மக்களின் எண்ணத்தை மதிக்காத ஆட்சியாளருக்கு எதிர்காலம் என்ன மரியாதை தரும்?

பிப். 20—அர்த்தால் வெற்றி சந்தேகத்திற்குரியதா?

மாநில மாநாட்டில் மொழிவழி மாநிலக் கோரிக்கையை விளக்கி

பொதுச்செயலாளர் தலைமையுரை

தமிழ் மக்களின் உள்ளத்தில் இன்னும் குமுறிக் கொண்டிருக்கும் மொழிவழி மாநிலப் பிரச்சினை குறித்து, தி. மு கழகம் கருதுவதென்ன? தமிழகத்தில் அமைந்த சர்வ கட்சி கூட்டணி எப்போது, ஏன் தோன்றியது?

தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கம் இல்லாத இன்றைய ஆட்சியாளரை, எதிர்காலம் என்னவென்று கருதும்? என்ன மரியாதை வழங்கும்?

தமிழ் மக்கள், பிப் 20-ல் நடத்திய அர்த்தால் வெற்றிகரமானதல்ல என்று கூறப்படுமானுல், வேறு எப்போதுதான் தமிழகத்தில் வெற்றிபெற்ற அர்த்தால் நடைபெற்றிருக்க முடியும்?

மக்களின் எண்ணம் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டும், அதை மதித்து நடக்காதவர்கள் ஆட்சியிலிருப்பது முறையா?

—இப்படி அடுக்கடுக்கான கேள்விகளுக்கு விடை, பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன் அவர்களின் 2-வது மாநில மாநாட்டுத் தலைமையுரையில் தெளிவாகக் கிடைக்கிறது. அவரது தலைமை உரையின் மற்ருெரு பகுதி இங்கு தரப்படுகிறது :—

“அடுத்து, நாம் சென்றமுறை தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் புயல் வீசிய கொடுமைக்கு ஆளான மக்களுக்கு உதவியதைக் குறிப்பிடவேண்டும்.

“புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ. 26 ஆயிரம் பெறுமான கைத்தறி ஆடைகளை வாங்கி வழங்கினேம்.

“இம்முறை—சென்ற ஆண்டு இறுதியில் புயல் வெள்ளம் ஏற்பட்டபோதும் நாம் நம்மால் ஆனதைச் செய்தோம் — துணிமணிகள், உணவுப் பொருள்கள், பணம் திரட்டி, நாமே நேரிடையாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கியிருக்கிறேம். இப்படி கடந்த ஆறு ஆண்டுக் காலத்தில், நாம், அரிய சாதனைகள் பல செய்திருக்கிறேம்.

“அடுத்து, சமீபகாலமாகத் தமிழ் மக்களின் உள்ளங்களில் குமுறலை எழுப்பிய மொழிவழி மாநிலப் பிரச்சினையையும் நான் இங்கு குறிப்பிட வேண்டும்.

“சாதாரண மக்களும் ஆட்சியின் அலுவல்களைப் புரிந்து கொள்ள—அதில் பங்கு பெற, அந்த சாதாரண மனிதனின் தாய் மொழியில் ஆட்சி நடைபெற வேண்டும். அப்போதுதான் ஜனநாயகம், உண்மையிலேயே அரசாட்சியின் அடிப்படையாக விளங்குவதாகக் கொள்ள முடியும்.

“இப்படி ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தின் தாய்மொழி ஆட்சி மொழியாக இயங்க வேண்டுமானுல், அந்த ஆட்சிக்கு உட்படும் பிரதேசம் முழுவதும், அந்த மொழி வழங்குவதாக இருக்க வேண்டுவது அவசியம்.

“அந்த அடிப்படையில், தமிழ் மொழி வழங்கும் பகுதிகள் அனைத்தும் கொண்ட தமிழ் மாநிலம் அமைய வேண்டும் என்பது, தமிழ் மக்களின் நீண்ட நாளைய ஆவலாகும். மொழிவழியாக மாநிலங்கள் அமைய வேண்டும் என்பதே தி மு கழகத்தின் கொள்கை என்பதால், நாம், தமிழ்மொழி வழங்கும்எல்லா பகுதிகளும் அடங்கிய தனித் தமிழ் மாநிலம் வேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பினேம்.

“மாநிலப் புனரமைப்புக் குழுவினர், தேவிகுளம், பீர்மேடு, சித்தூர், நெய்யாற்றங்கரை பிரதேசங்களைத் திரு-கொச்சியிலேயே இருக்க வேண்டும் என்றும், சித்தூர், புத்தூர், திருத்தணி முதலிய வட்டங்கள் ஆந்திராவிலேயே இருக்க வேண்டும் என்றும் கூறியதை நாம் எதிர்த்தோம்; கம்யூனிஸ்டுகள் எதிர்த்தனர்; சோஷலிஸ்டுகள் எதிர்த்தனர்; தமிழரசுக் கழகத்தவர் எதிர்த்தனர்.

மொழிவழியாக மாநிலங்கள் அமைய வேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பியவர்களே காந்தியாரும், மற்ற காங்கிரசுத் தலைவர்களும்தான்.

“வெள்ளையன் கண்ட கண்டபடி மாநிலங்களைப் பிரித்து வைத்திருக்கிருன்; ஒரே மொழி வழங்கும் மக்கள் பல மாநிலங்களில் இணைக்கப்பட்டு அவதியுறுகின்றனர்; வெள்ளையன் பிரித்தாளும் சூழ்ச்சியைக் கையாண்டு, தன் ஆதிக்கத்தை நீடிக்கச் செய்கிருன்; மொழிவழியாக மாநிலங்கள் அமைந்தால்தான் நாட்டு மக்கள் தங்கள் தங்கள் தாய் மொழியில் ஆட்சி நடத்த முடியும்—என்று எடுத்துக்காட்டியவர்கள் காங்கிரசார்தான். ‘வெள்ளையன் மொழி வழி மாநிலம் அமைக்காவிடினும், நாங்கள் அமைத்துக் கொள்கிறேம்’ என்று கூறி, தமிழ் நாடு காங்கிரஸ், கர்நாடகக் காங்கிரஸ், ஆந்திர காங்கிரஸ், மராட்டியக் காங்கிரஸ் என்று, மொழியை அடைமொழி தந்து, தங்கள் கட்சிகளைப் பிரதேசவாரியாகப் பிரித்தனர், காங்கிரசார்!

“ஆனுல், அதே காங்கிரசார் ஆட்சிபீடமேறியதும், ‘மொழிவழி மாநிலம் அமைவது கூடவே கூடாது’ என்று பேச ஆரம்பித்தனர்.

“ஏற்கனவே, தனி ஆந்திர மாநிலம் அமைப்பதில் தீவிரம் காட்டிவந்த ஆந்திரர், முறையாக, முதலில் கேட்டனர்; சட்டசபைப் பிரதிநிதிகளை அனுப்பிக் கேட்டனர்; தூதுக் கோஷ்டிகளை அனுப்பிக் கேட்டனர்; மாநாடு கூட்டி, தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பிவைத்துக் கேட்டனர்; டில்லி மக்கள் சபையில் கேள்விகள் எழுப்பி, கோரிக்கையை வலியுறுத்தினர்; ஆந்திர காங்கிரசாரே இந்தக் கோரிக்கையில் தீவிரம் காட்டினர். இத்தனை நடவடிக்கைகளும் பலன் பெறவில்லை; டில்லி சம்மதிக்கவில்லை; கடைசியில் பொட்டி ஸ்ரீராமுலு என்பவர், ‘நான் உண்ணுவிரதம் இருந்து சாகிறேன்; என் பிணம், ஆந்திர மாநிலக் கோரிக்கைக்கான காணிக்கையாகட்டும்,’ என்று கூறி, பட்டினிப் போர் தொடுத்துச் செத்தார்; அவர் பிணம் சுடுகாட்டிற்கு எடுத்துச் செல்லப்படுவதற்கு முன்—அவர் சடலம் சாம்பலாவதற்கு முன், விஜயவாடா முதலிய ஆந்திர நகரங்களில் கிளர்ந்தெழுந்த மக்களின் கொதிப்பில், ஏராளமான நாசவேலைகள் நடைபெற்றன; ஏராளமான பொருள் நஷ்டம் ஏற்பட்டது; அதன் பின்னர்தான், நேரு இறங்கி வந்தார். ‘நான் ஆந்திர மாநிலத்தைப் பிரித்துத் தருகிறேன்’ என்ருர்; அதற்காக ஒரு நீதிபதியை நியமித்தார்.

“பின்னர் ‘பெல்லாரி ஆந்திராவுடனிருக்கும்’ என்று கூறப்பட்டபோது, பெல்லாரி மக்கள் கிளர்ந்தெழுந்து ‘நாங்கள் ஆந்திராவுடன் இருக்கமாட்டோம்; கர்நாடகத்துடன்தான் இருப்போம்’ என்று கூறினர். முறையான வழிகளில் கேட்டுப் பார்த்தனர்; நடைபெறவில்லை. பின்னர், அங்கும் நாசவேலைகள் நடைபெற்ற பின்புதான், நேரு இறங்கிவந்தார். மற்றுமோர் நீதிபதியை நியமித்து, ஆந்திரா பிரிந்த அன்றே பெல்லாரியையும் கர்நாடகத்துடன் இணைக்கச் சம்மதித்தார்.

“அதைத் தொடர்ந்து, நாடெங்கும் பலரும் கிளர்ச்சிகளில் ஈடுபடத் துவங்கினர்—மொழிவழி மாநிலம் கோரி! அதன் விளைவாகப் பிறந்ததுதான் மாநிலப் புனரமைப்புக் குழு.

“அந்தக் குழுவினர், ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாக இந்தியா முழுவதையும் சுற்றிவிட்டு, பல கட்சிகள், இயக்கங்களையும் சந்தித்துவிட்டு. அறிக்கை தந்தனர்

“அந்தக் குழுவினரை, தி மு கழகத்தின் சார்பில், தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், மதியழகன், ஏ கோவிந்தசாமி, நானும் சென்று சந்தித்து, நமது கழக கோரிக்கையைத் தந்துவிட்டு வந்தோம்.

“பல்வேறு கட்சியினரும் தங்கள் தங்கள் எண்ணங்களைத் தெரிவித்திருந்தனர்.

“ஆனுல், மாநிலப் புனரமைப்புக் குழுவினரோ, திரு-கொச்சி தமிழ் வட்டங்களில், நாஞ்சில் பகுதியை மட்டும் தந்துவிட்டு, தேவிகுளம், பீர்மேடு, செய்யாற்றங்கரை, சித்தூர் பகுதிகளைத் தர மறுத்துவிட்டனர்.

“அப்போதுகூட, தமிழகத்தில், சர்வகட்சிக் கூட்டணி அமைக்கப்படவில்லை; காரணம், கனம் நிதி மந்திரி சுப்பிரமணியம், சட்டசபையில், இந்த எஞ்சிய பகுதிகளும் தமிழகத்திற்கு வரவேண்டும் என்பதற்கான தீர்மானத்தைக்கொண்டு வந்து, அவை தமிழகத்திற்குத்தான் உரியன என்பதற்கு அழகான காரணங்களை எடுத்துக் காட்டி வாதாடினுர்.

பின்னர், காமராசரும், சுப்பிரமணியமும், பக்தவத்சலமும் ‘டில்லிக்குச் செல்கிறேம்; நேருவிடம் முறையிட்டு, தேவிகுளம், பீர்மேடு பகுதிகளைத் தமிழகத்திற்குப் பெற்றுத் திரும்புவோம்; எனவே, எவரும் இங்கு ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டாம்’ என்று வீரம் பேசினுர்கள்.

“ஆனுல், போய்விட்டுத் திரும்பிய இந்த ‘மும்மூர்த்தி’களும், மாநிலக் குழுவினர் தந்திருந்த செங்கோட்டைத் தாலுகாவிலும் பாதியை கேரளத்திற்குத் தந்துவிட்டு வந்தார்கள்; வந்து கூறினுர்கள்—‘நேருவே கூறும்போது நாங்கள் என்ன செய்வது?’—என்று!

“அப்போதுதான், தமிழகத்தில், சர்வ கட்சிக் கூட்டணி தோன்றியது.

“தெலிங்கானு, ஆந்திரா என்று ஆந்திரத்தை இரு கூருக்கியிருப்பதை ஒப்பமாட்டோம்; ஐந்தாண்டுகளுக்குப் பிறகே ஒன்று சேர்க்கும் யோசனை என்பதை ஏற்கமாட்டோம்; ஒரே மாநிலமாக ‘விசால ஆந்திரம்’ உருவாகியாக வேண்டும்,’ என்றுதான், ஆந்திரத் தலைவர்களான கோபால ரெட்டியும், சஞ்சீவி ரெட்டியும் போராடினுர்கள்; கோரியதைப் பெற்றுத் திரும்பினுர்கள்.

“கேரளத்திற்காக வாதாடிய பனம்பள்ளி கோவிந்த மேனன், கொடுத்த செங்கோட்டையைப் பெற்றுத் திரும்பினுர்.

“தமிழ் நாட்டு மும்மூர்த்திகளோ, இழந்த தேவிகுளம், பீர்மேடு பகுதிகளை பெற்றுத் திரும்புவதற்குப் பதிலாக, பெற்ற செங்கோட்டையில் பகுதியை விட்டுவிட்டுத் திரும்பினுர்கள்.

“அவர்கள் எல்லாம், ‘நேருவுடன் சண்டை போட்டோம்; போராடினேம்; கோரிக்கைகளைப் பெற்றுத் திரும்பினேம்’ என்ருர்கள்; தமிழ் நாட்டு மும்மூர்த்திகளோ, ‘நேருவே கூறிவிட்டார்; அதனுல் கொடுத்துவிட்டு வந்தோம்,’ என்று பேசினுர்கள்; அதனுல்தான், சர்வகட்சிக் கூட்டணி தோன்றியது.

“காமராசர், சுப்பிரமணியம் ஆகியோரின் கருத்து, தமிழ் மக்களின் எண்ணத்தைப் பிரதிபலிப்பதாக இல்லை; இந்த மந்திரிகளின் முடிவு தமிழ் நாட்டின் முடிவு அல்ல; நாட்டு மக்களின் முடிவு வேறு என்பதை வெளிச்சமாக்க வேண்டியது அவசியமாயிற்று.

“கூட்டு முன்னணி, எந்தவித உடன்படிக்கை செய்துகொண்டும் உருவாகவில்லை; எவரும் தங்களின் எந்தக் கொள்கையையும் விட்டுவிட்டு முன்னணியில் சேரவில்லை; குறிப்பிட்ட இந்த மொழிவழி மாநிலப் பிரச்சினையில் எல்லாக் கட்சியினரும் ஒத்த கருத்துடையவராயிருந்ததினுல்தான், அவரவர் கொள்கைகள், இலட்சியங்கள் அவரவரிடம் அப்படியே இருக்க, இந்தப் பிரச்சினைக்கு வழிகாண மட்டும் ஒன்றுபட்டனர்; உடன்படிக்கை அடிப்படையில் அல்ல—ஒத்துழைப்பு அடிப்படையில்!

“கூட்டணியில், திராவிட முன்னேற்றக் கழகம் பெரும் பங்கு வகித்தது.

“பிப். 20-ந் தேதியன்று தமிழகமெங்கணும் கூட்டணியின் வேண்டுகோளுக்கு இணங்க, அர்த்தால்—பொது வேலை நிறுத்தம் அனுஷ்டிக்கப்பட்டது.

“நம்முடைய இழப்பு, கஷ்டம், துக்கம் இவற்றைத் தெரிவித்துக் கொள்வதற்காக நம்முடைய கடைகளை அடைத்து, பணிகளை நிறுத்தி, நிறுவனங்களை மூடி அர்த்தால் செய்தோம்.

“நாம் நடத்திய அர்த்தால், எதிர்ப்புப் போராட்டமோ, மறியல் போராட்டமோ அல்ல!

“இந்த அர்த்தாலை வெற்றிகரமாக்கியதின் மூலம் தமிழ் மக்கள் தங்களின் எண்ணத்தை—முடிவைத் தெளிவாக்கினர்.

“இந்த பிப். 20-ல் நடைபெற்ற அர்த்தால் வெற்றி பெறவில்லை—தோற்றது, என்ருல், தமிழ்நாட்டில் இதற்குமுன் நடைபெற்ற எந்த அர்த்தால் வெற்றிகரமாக நடைபெற்றது என்று கூறிடமுடியும்?

“1942-ல், காந்தியார் கைது செய்யப்பட்டபோது நடைபெற்ற அர்த்தாலோ, 1948-ல் அவர் சுட்டுக் கொல்லப்பட்டபோதோ நடைபெற்ற அர்த்தால்கள், இந்த அர்த்தாலைப் போல, நாடெங்கும் ஒரே நாளில் இத்தனை அமைதியாக நடைபெற்றதில்லையே! விட்டுவிட்டு, வேறு வேறு நாட்களில் குழப்பங்கள், கலவரங்களுக்கிடையேதானே முன்னைய அர்த்தால்கள் நடைபெற்றிருக்கின்றன?

“சென்ற ஆண்டில், கோவா அடக்குமுறைக்காக நடைபெற்ற அர்த்தால்கூட இப்படி நடைபெறவில்லையே! அப்படியிருக்க, பிப். 20 அர்த்தால் வெற்றிபெறவில்லை என்று எப்படிச் சொல்ல முடியும்?

“இதுபோன்றதொரு வெற்றிகரமான அர்த்தாலின் மூலம் தமிழ் மக்கள் தங்கள் எண்ணத்தை சுட்டிக் காட்டியும்கூட, எதுவுரைத்தும் கூடக் கேட்காமல், அவர்களின் எண்ணத்திற்கு விரோதமாகத் துரோகமிழைத்திருக்கிருர்கள்—சென்னை ஆட்சியாளர்கள்!

“லினலித்கோ — மீர்ஜாபருக்கு சார்பாக இருந்து, சிராஜ்-உத்-தௌலாவை, வெள்ளைக்காரர் ராபர்ட் கிளைவிற்குக் காட்டிக் கொடுத்தானே மீர்சந்த், அவனுக்குத் தரப்படும் மரியாதையைத்தான்—துரோகிப் பட்டத்தைத்தான், எதிர்காலத்தில், இன்றைய சென்னை ஆட்சியாளருக்கு தமிழ் மக்கள் தருவர்.

“அன்று சட்டசபையில், ‘தேவிகுளமும், பீர்மேடும் தமிழகத்துக்கு வேண்டும்’ என்று பேசியவர்கள்தான், இன்று, ‘மேடாவது—குளமாவது’ என்று பேசுகிருர்கள்.

“இந்தத் தேவிகுளம், பீர்மேடு பகுதிகள் எத்தனை வளமுடையவை? அங்கிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் மிளகின் அளவுமட்டும் ஆண்டொன்றுக்கு ரூ.21கோடிமதிப்புடையது என்ருல், அதன் வளத்தை நீங்களே கணக்கிட்டுக் கொள்ளுங்கள்.

“இப்படி விலை மதிப்புள்ள பொருள்கள் பல விளையும் வளமான பகுதிகளைத்தான் தமிழர்கள் இழந்து நிற்கின்றனர்!

“தமிழர்கள் வாழும் பகுதி தாய்த் தமிழகத்துடன் இருக்கவேண்டும்—என்ற மொழிவழிக் கோரிக்கைக்காகத்தான் நாம் போராட்டம் நடத்தினேம்—இந்தப் போராட்டம், [illegible] ‘மொழிவழி பிரிதல்—இணைதல் [illegible] என்ற அடிப்படை [illegible] தோற் [illegible]

வீராப்புப் பேசும் முதலமைச்சர்!

தெ. ஆ. இந்தியர் பற்றி இந்தியா கவலைகொள்ளக்கூடாதாம்!

கேப்டவுன், மே 28— தென்னுப்பிரிக்க யூனியன் செனட்டில், பிரதமர் ஸ்டிரீடம் பேசுகையில், இந்தியாவின் குடிமக்களாக இருந்தாலொழிய தென்னுப்பிரிக்காவிலுள்ள இந்தியர்களைப் பற்றி இந்தியா கவலைப்படக்கூடாதென்றும், அவர்கள் பிரச்சினையில் தலையிடும் உரிமையை இந்தியாவுக்குத் தென்னுப்பிரிக்கா அளிக்காதென்றும் குறிப்பிட்டுள்ளார்.

‘பல ஆண்டுகளுக்கு முன்னர், ஆப்பிரிக்க மக்கள் பலர் அர்ஜென்டைனுவுக்குச் சென்றனர்; அவர்கள் அங்கு நல்லமுறையில் நடத்தப்படவில்லையென்று ஒரு சமயம் அறிவிக்கப்பட்டது; அப்போதுகூட, அப்பிரச்சினையில் தென்னுப்பிரிக்கா தலையிடவில்லை; அவர்களுடைய இந்த உதாரணத்தை, இந்தியா பின்பற்ற வேண்டும்’ என்றும் அவர் கூறியுள்ளார்.

சென்னையில் புத்தர் விழா

பல்லாயிரம் மக்கள் கலந்துகொண்ட சிறப்புக் கூட்டம்

(நமது நிருபர்)

சென்னை, மே 24—

புத்தரின் 2500-வது பிறந்த நாள் விழா—பரி நிர்வாண விழா நேற்று மாலை, 5–30 மணியளவில் ராஜாஜி மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

சென்னை மாநில கவர்னர் ஸ்ரீ பிரகாசா மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

மண்டபத்திற்கு உள்ளும் புறமும், பல்லாயிரக் கணக்கான மக்கள், ஆண்களும் பெண்களுமாகக் கூடிவிட்டனர்.

கவர்னர் தலைமையுரை ஆற்றிக் கொண்டிருக்கையில், அண்ணு அவர்கள் வந்தார்.

கூடியிருந்த மக்கள், மகிழ்ச்சிப் பெருக்கால் பேராரவாரம் செய்தனர். அவர்கள் எழுப்பிய கையொலி அடங்க இரண்டு மூன்று நிமிடங்கள் ஆயின.

தொடர்ந்து கவர்னர் பேசினார். ஆனால், வந்திருந்த பல்லாயிரம் மக்களும் பேச்சுக்களைக் கேட்கக் கூடிய வகையில், ஒலிபெருக்கி ஏற்பாடுகள் இல்லை.

அமைதி காக்குமாறு அண்ணு அவர்கள் கேட்டுக்கொண்டார்; ஆனால் அவர் என்ன பேசினார் என்பதே, மண்டபத்திற்குள் குழுமியிருந்த மக்களில் ஒருசாராருக்குக் கேட்கவில்லை—ஒலிபெருக்கி சரியில்லாததால்!

பின்னர், கவர்னர் கேட்டுக் கொண்டபடி, முதன் முதலாக அண்ணு அவர்கள் அரியதோர் சொற்பெருக்காற்றினார். மக்கள் அனைவரும் அமைதியாகவிருந்து அண்ணு அவர்களின் சொற்பொழிவைக் கேட்டுப் பயன்பெற்றனர்.

அடுத்து, தோழியர் சண்முக வடிவு அவர்கள், 'மணிமேகலை' யிலிருந்து சில வரிகளைப் பாடிக் காட்டினார்கள்.

பின்னர், சென்னைப் பல்கலைக் கழக தத்துவப் பேராசிரியரான கே. பி. எம். மகாதேவன் பேசினார்.

அதுபோது கவர்னர், முதன் மந்திரி காமராசர் இருவரும் எழுந்து சென்று விட்டனர். 'கவர்னருக்கு உடல் நலம் சரியில்லை' என்று, சோதர பத்திரிகை நிருபர் ஒருவர் என்னிடம் கூறினார்.

அடுத்து, இலங்கையிலிருந்து வந்திருந்த நாரத தெரோ என்பாரும், சென்னையில் உள்ள பர்மியத் துணைத் தூதுவரான யுதான்—மாங் என்பாரும், டாக்டர் ஏ.எஸ். ஜான்சன் என்ற பேராசிரியரும் பேசினர்.

நிகழ்ச்சி நிரலில் கண்டிருந்தபடி விழா சிறப்பாகவே அமைந்திருந்தது.

கவர்னர் சென்றபின், கூட்டத்திற்கு மந்திரி பி. பரமேசுவரன் தலைமை தாங்கினார்.

எழும்பூர் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் ஆர். ஒய் சோமசுந்தரம் நன்றி கூறினார்.

கூட்டம் மங்களக் கீதத்துடன் இனிது முடிந்தது.

கூட்டம் முடியும்வரையில் டாக்டர் வரதராசுலு நாயுடு, ஆந்திர முதன் மந்திரி பி. கோபால ரெட்டி, அண்ணு முதலானோர் இருந்து சிறப்பித்தனர்.

புத்தர் விழாவில் அண்ணு

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

தம்முடன் ஐந்து சீடர்களையும் அழைத்துச் சென்றதாகவே வரலாறு கூறுகின்றது.

"அவர் புரிந்த தவமும், இருந்த உண்ணுவிரதமும் பலன்தராது போய்விடவே, சிந்திக்க முற்படுகிருர்; தன்னைத் தானே உணர்ந்து கொள்ள முற்படுகிருர்.

"சிந்திக்கச் சிந்திக்க உடல் இளைத்தாலும், உள்ளத் திண்மை குறையாததால், வால்மீகியும், விசுவாமித்திரனும், நான்கு வேதமும், ரிக் வேதமும் தராது போய்விட்ட அறிவு ஒளி அவரது உள்ளத்தில் உதயமாகிறது. காரிருளைக் கிழித்துக் கொண்டு கதிரவன் கிளம்புவதுபோல், போதி மரத்தடியில் அவருக்கு அறிவு ஒளி தோன்றுகிறது.

"ஆசைதான் மனிதனின் துயரங்களுக்கும், துன்பங்களுக்கும் காரணம் என்பதை அறிந்துகொள்கிருர்.

"நிராசையால்தான் துயரங்களைத் தவிர்க்க முடியும் என்று உணர்கிருர்; அதைத்தான் நிர்வாண நிலை, பரிபூரணத்துவம், விருப்பு வெறுப்பற்ற தன்மை என்று, தான் சிந்தித்துக் கண்டவை என்று எடுத்துச் சொன்னுர்.

"ஆண்டவன் எனக்கு வழி காட்டவில்லை; சிந்தித்தேன் —சிந்தித்ததை எடுத்துக் கூறுகிறேன் — என்ருர் புத்தர்!

"2,500 ஆண்டுகளுக்கு முன்பு, 'ஆண்டவன், மனிதருக்கு வழி காட்டமாட்டான்' என்று எடுத்தியம்புவது எத்தனை கடினமானது? இன்று எங்களைப் போன்றவர்கள் சிறு சிறு பகுத்தறிவுக் கொள்கைகளைப் பிரச்சாரம் செய்யும்போதே, ஏசிப் பேசுகிருர்களே, இந்தக் காலத்தில்!

"அன்று — இன்றைக்கு 2,500 ஆண்டுகளுக்கு முன் அந்தக் கருத்துக்களைக் கூறுவது சுலபமானதல்ல!

"கங்கையும்—யமுனையும், கோதாவரியும், கிருஷ்ணுவும் கடலில் கலந்துவிடும்போது, அவை கடல் ஆகிவிடுகின்றனவே தவிர, 'கங்கை-யமுனை' என்றழைக்கப் படுவதில்லை; அதுபோல, எனது கொள்கைகளை ஏற்பவர்கள் செட்டியார்களாக, நாயக்கர்களாக, நாடார்களாக, பிள்ளைகளாக, இருக்கமாட்டார்கள்; மனிதர்களாக இருப்பார்கள்—என்று புத்தர் கூறியிருக்கிருர்; சாதிக் கேடுகளைக் கண்டித்திருக்கிருர்!

"இன்று சாதிக் கேடுகள் ஒழிய வேண்டும் என்று நம்மைப்போன்றவர்கள் எடுத்துக் கூறுவதற்கே, இன்னும் எதிர்ப்பு இருக்கத்தான் செய்கிறது!

"நமது நாட்டிலே அவதாரங்கள் பத்து உண்டு என்பார்கள் இந்த அவதாரங்கள் எல்லாம் துஷ்டநிக்ரக,சிஷ்டபரிபாலனத்திற்கு என்றும் கூறுவார்கள்.

"இராமாவதாரம் என்ருல், இராவணனை ஒழித்தோடு சரி!

"கிருஷ்ணவதாரம் என்ருல், கம்சனை ஒழிப்பதுடன் முடிந்துவிடுகிறது!

"நரசிம்மாவதாரம் என்ருல், இரணியனை ஒழிப்பதோடு முடிந்துவிடுகிறது!

"இந்தப் பத்து அவதாரங்களுக்குப் பிறகேனும், துஷ்டர்கள் ஒழிந்தார்களா என்ருல், இல்லை!

"ஆனல், புத்தர் இந்தத் துஷ்ட நிக்ரக, சிஷ்டபரிபாலன வேலையை, அவரவர்களுக்கே விட்டுவிட்டார்!

(அண்ணு அவர்கள் பேச்சு முடியவில்லை நாளை வெளிவரும்)

கண்ணதாசன்

சுற்றுப்பயணம்

மே 27 : மதுராந்தகம்
28 : பிரான்மலை
30 : சிவகங்கை
31 : திருநெல்வேலி

புத்தர் பற்றி நேரு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது. அதுதானே கிரகணம் என்பது?

"மேளம் கொட்டுவதாலேயோ, ஆற்றில் மூழ்குவதாலேயோ, பட்டினி கிடப்பதாலேயோ, ஜெபமாலை உருட்டுவதாலேயோ கிரகணம் மறைந்து விடுவதில்லை. சந்திரன் மீது பூமியின்நிழல் விழுவது நின்றதும், கிரகணம் முடிகிறது.

"மதத்தின் பெயரால் நிலவும் இதுபோன்ற மூடநம்பிக்கைகளை ஒழிக்கத்தான் கௌதம புத்தர் பாடுபட்டார்.

"எனவே, நாம் சரியான பாதை வழி நடக்கிற புத்தர் போதனைகளைப் புரிந்து கொள்ள வேண்டும். நமது மனமும் இதயமும் நிர்மலமாகும் போதுதான் நமக்கு சாத்தியமானதாயிருக்கும்.

"நாம் ஒருவருக்கொருவர் அடித்துக் கொள்ளாமல், மதத்தின் பெயரால் ஒருவருக்கொருவர் மண்டையை உடைத்துக் கொள்ளாமல், நமக்கிடையே வேற்றுமைகளைக் கற்பித்துக் கொள்ளாமலிருப்பதின் மூலம்தான் இந்த இதய பரிசுத்தத்தைப் பெற முடியும்.

"இன்று மக்கள் பெற வேண்டிய மகத்தான பாடம் எல்லாம், சாதி முறைக்கு எதிராக போராட வேண்டும் என்பது தான்.

"புத்தர், இந்த சாதி முறைக்கு எதிராக மிக ஆற்றலோடு குரல் எழுப்பினர்.

"நாம் இன்னும், இந்த சாதி முறைகளை ஒழித்துக்கட்ட முடியாதிருப்பது நமது பலவீனத்தைத்தான் காட்டுகிறது.

"அன்பு, கூட்டுறவு, அகிம்சை என்ற கொள்கையை, வழியைக் கடைபிடித்து வாழ நாம் தொடர்ந்து முயற்சிக்க வேண்டும்,"

என்று இந்தியப் பிரதமர் நேரு, புதுடில்லியில் நேற்று மாலை நடைபெற்ற புத்த ஜெயந்தி விழாவில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிருர்.

வங்க சட்டசபை கலைக்கப்பட்டது

டாக்கா, மே 24—

கிழக்கு பாகிஸ்தான் சட்டசபையைக் கலைத்துவிட்டு கவர்னர் உத்திரவு பிறப்பித்துவிட்டாராம்.

அங்கு கவர்னர் ஆட்சியை ஏற்படுத்துவதென்று 5-மணி நேர விவாதத்திற்கு பின்னர் பாகிஸ்தான் மந்திரிசபை முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறதாம்.

கவர்னர் ஆட்சியைத் தவிர்க்கும் பொருட்டு சர்வகட்சி கூட்டு சர்க்கார் ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் நடைபெற்று வருகிறதாம்.

மறைவு

கோலார்—தங்கவயல் ஆண்டர்சன் பேட்டை, தி. மு. கழகச் செயலாளர் தோழர் கே. ஜி. சின்னராசன் அவர்கள் 20—5—56 பிற்பகல் மாரடைப்பால் இயற்கை எய்தியதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிரேம். அவரது மறைவுக்கு ஆண்டர்சன் பேட்டை தி. மு. கழகம் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளுகிறது. நமது அனுதாபமும் உரித்தாகுக. (ஆ.ர்.)

'திராவிடன்'

மாநில மாநாட்டுச் சிறப்பிதழ்

★

25—5—56-ந் தேதிய இதழுக்குப் பதிலாக—மாநில மாநாட்டு நிகழ்ச்சிகள், அறிஞர் அண்ணு சிறப்புரை, பொதுச்செயலாளர் தலைமையுரை, முன்னணி வீரர்களின் கருத்துரை, தீர்மானங்கள், புகைப்படங்கள் ஆகியவை களைத்தாங்கி 1—6—56-ந் தேதியன்று வெளிவரும்

அதிக பக்கங்கள் - விலை அணு 4

குறிப்பு: அதிகப் பிரதிகள் வேண்டுவோர் உடனே தெரிவிக்க வேண்டுகிரேம்.

கழகக் கூட்டம்

★

சாத்தான்குளம்:
26—5—56 மாலை 6 மணிக்கு
பேசுபவர்:
இரா. சு. தங்கப்பழம்

இடையகோட்டை தி. மு. கழக 2-ம் ஆண்டு விழா

27–5–56-ல், இடையகோட்டை தி. மு. கழக இரண்டாம் ஆண்டு விழா, 'முத்தமிழ் திருவிழா' வாகக் கொண்டாடப்படும்.

புனுகு-நடராசன் குழுவினர் இசை விருந்தளிப்பர்.

கன்னிவாடி திரு. கே. எஸ். பெரியார் தலைமையில், தோழர்கள் மு. கருணநிதி, எஸ்,முத்து, டி. கே. சீனிவாசன் பேசுவர்.

புரட்சி நாடக மன்றத்தினரால் 'தூக்கு மேடை' நாடகம் நடைபெறும்.

மாலை 3 மணிக்கு மாபெரும் ஊர்வலம் நடைபெறும்.

12-வது ஆண்டு விழாவும் மாநாடும்

'தி ஜெனரல் அண்டு இன்டஸ்டிரியல் ஒர்க்கர்ஸ் யூனியன்' 12-வது ஆண்டு விழாவும், மாநாடும் சென்னை—வண்ணையம்பதி பென்ஷனர் லேன் திடலில் (கிருஷ்ணு டாக்கீஸ் அருகில்) 27—5—56 மாலை 5 மணிக்கு, தோழர் கே. எஸ். ஷெட்டி தலைமையில் நடைபெறும்.

தோழர்கள் டி. ஆர் கண்ணபிரான் வரவேற்புரையாற்றுவார்; வி. ஜி. இராமசாமி, கொடியேற்று விழாவாற்றுவார்; ஏ. வி குமார் மாநாட்டைத் திறந்துவைப்பார்.

தோழர்கள் சி. பி. சிற்றரசு, எஸ் மகாதேவன், பி. எம். சுவாமிராஜ், ஆர். ஆர். சந்திரன் ஆகியோர் பேசுவர்

டி. எஸ். டி. தொழிலாளர் பொதுக்கூட்டம்

28—5—56 இரவு 7 மணியளவில் திருவானைக்கோயில் சன்னதி வீதியில், டி. எஸ் டி. தொழிலாளர்களின் மறியல் — வேலை நிறுத்தப் பொதுக்கூட்டம் தோழர் கே. பெருமாள் தலைமையில் நடைபெறும்.

தோழர்கள் எம். எஸ். மணி, ஐ. எம். ஷரீப், பி. ஆர். இராமசாமி, பி. சாத்தபெருமாள் எம்.சி. பேசுவர்.

சுகாதாரப் பிரச்சாரம்

27—5—56 காலை 7 மணிக்கு, திரு. அரங்காதன் தலைமையில், வண்ணையம்பதி வீதிகளில், இளங்கோ கலைமன்றத் தோழர்களும், படிப்பக மாணவ—மாணவிகளும் சுகாதாரப் பிரச்சாரம் செய்வார்கள். பின்னர், படிப்பகத்தில் சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்படும்.

எஸ். எஸ். தென்னரசு

சுற்றுப்பயணம்

மே 28 : பிரான்மலை
29 : திருக்கோட்டியூர்
30 : சிவகங்கை

திருமணங்கள்

27—5—56 காலை 9 மணியளவில், காஞ்சீபுரம், கருக்கினலமர்ந்தான் தெரு, 37-ம், எண் இல்லத்தில், அண்ணு அவர்கள் தலைமையில் தோழியர் லலிதா (தோழர் எம். தங்கவேலர் குமாரத்தி)—எஸ். சீனிவாசன் திருமணம் நடைபெறும். தோழர்கள் சி. பி. சிற்றரசு, இராம அரங்கண்ணல், சி. வி. எம். அண்ணுமலை, ஈழத்து அடிகள் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

27—5—56 காலை 8 மணியளவில், வேலூர் அடுத்த கருகம்பத்தூரில் மேலண்டை வீதியில், தோழர் என். வி. நடராசன் தலைமையில், கருகம்பத்தூர் தி மு கழகக் கிளை செயலாளர் தோழர் நடேசன்—தோழியர் மலர்ச்செல்வி (சரோசா) திருமணமும்; காலை 10 மணியளவில், தோழர் வெங்கடேசன்—தோழியர் சரோசா திருமணமும் நடைபெறும். தோழர்கள் அ. கருத்தோவியன், புலவர் கூத்தரசு வாழ்த்துரை வழங்குவர்.

* * *

27—5—56 காலை 7 மணியளவில், சென்னை-வண்ணையம்பதி, எண் 6, மணிகண்ட முதலி 2-வது சந்து, மணமகன் இல்லத்தில், தோழர் காஞ்சி-மணிமொழியார் தலைமையில், தோழர் கி. நடேசன் – தோழியர் தனலட்சுமி வாழ்க்கை ஒப்பந்த விழா நடைபெறும். தோழர்கள் க. அன்பழகன், வி. எஸ். கோவிந்தராசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

27—5—56 காலை 9 மணியளவில், சென்னை—வேப்பேரி, ரண்டால்ஸ் ரோடு, 9-ம் எண்ணுள்ள இல்லத்தில், தோழர் க. அன்பழகன் தலைமையில், 25-வது வட்ட தி. மு. க. செயலாளர் தோழர் செயராமன்—தோழியர் சரோசா வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெறும். தோழர்கள் பலர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

27—5—56 காலை 7-30 மணியளவில், சென்னை—மயிலை கபாலீசுவரர் கோயில் தென்னண்டை மாட வீதியிலுள்ள வன்னியர் சத்திரத்தில், புலவர் எஸ். எஸ். அருணகிரிநாதர் அவர்கள் தலைமையில், தோழர் சண்முகசுந்தரன் (மயிலை சிவமுத்துக் குமாரசாமி அவர்கள் குமாரர்) — தோழியர் சரசுவதி திருமணம் நடைபெறும்.

* * *

27—5—56 காலை 8 மணியளவில், அய்யம்பேட்டைக்கு அடுத்த அகரமாங்குடியில், தோழியர் லட்சுமி—தோழர் சோலையா திருமணம் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ